**செய்தி வெளியீடு எண்.114**

**நாள்.13.2.2008**

**உயர் கல்வித் துறை**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர்.க.பொன்முடி அவர்கள் தலைமையில் உயர்கல்வித் துறையினுடைய கொள்கை குறித்து ஆய்வு செய்து வருகின்ற வரவு செலவுத் திட்ட சட்டமன்றக் கூட்டத் தொடரில் உயர்கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையின் போது கொள்கை முடிவுகள் அறிவிப்பதற்கு ஏதுவாக ஆய்வுக் கூட்டம் 12.2.2008 அன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் கலந்து கொண்டார்கள்:–

1. டாக்டர் வி.சி.குழந்தைவேலு, முன்னாள் அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர்
2. டாக்டர் எம். அனந்த கிருஷ்ணன்,
   முன்னாள் அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர்
3. திரு. சேவியர் அல்போன்ஸ், பல்கலைக் கழக மானிய நல்கை உறுப்பினர்
4. டாக்டர் மாரியப்பன், முன்னாள் துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. டாக்டர் தியாகராஜன், முன்னாள் துணைவேந்தர், சென்னை பல்கலைக்கழகம்
6. டாக்டர் பொன்னவைக்கோ, பாரதிதாசன் பல்கலைக் கழக துணை வேந்தர்
7. டாக்டர் ராமசாமி, துணைத் தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
8. டாக்டர் பாஸ்கரன், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
9. திருமதி. தவமணி, முதல்வர், எத்திராஜ் கல்லூரி
10. டாக்டர் சீனிவாசன், முழுநேர உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு
11. திரு.க.கணேசன், செயலர், உயர் கல்வித் துறை

இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாநில அளவில் உயர்கல்வித் துறையினுடைய வரவுசெலவுத் திட்ட மானியத்திற்கு முன்னதாக இவ்வாறு உயர்கல்விக் கொள்கை ஆய்வு செய்யப்பட்டிருப்பது தமிழகத்தில் முதன்முறையாக நடைபெற்றுள்ளது. இதில், 1. பல்கலைக்கழக ஆளுகை (University Governance), 2. தொகுப்புக் கல்லூரிகள் (Cluster Colleges), 3. தெரிவுசெய் திறன்முறை (Choice Based Credit System), 4. சமுதாயக் கல்லூரிகள் (Community Colleges) எப்படி நடைமுறைப்படுத்துவது, 5. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களிடைய

தொழில்நுட்பத் திறனறிவை ஊக்குவிப்பது, 6. பல்கலைக் கழக தேர்வு முறைகளில் மாற்றம் செய்தல், 7. கல்வி போதிப்பதிலும், கற்றலிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவதின் அவசியம் 8. மதிப்பீடு முறைகளில் (evaluation) மாற்றம் செய்வது, 9. அதிக எண்ணிக்கையில் உயர்கல்வியில் மாணவர்களை சேர்ப்பதற்கான வழிமுறைகள் ஆகியவற்றைக் குறித்து வல்லுநர்கள் கருத்து தெரிவித்திருக்கின்றனர். அக்கருத்துக்களின் அடிப்படையில் செயல் குறிப்பு (theme paper) தயாரிக்கப்படும். அக்கருத்துக்கள் அனைத்தையும் ஆராய்ந்து அறிக்கை கொடுக்கும்படி வல்லுநர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையின்படி வருகிற 19.2.2008 அன்று நடைபெறவிருக்கின்ற துணைவேந்தர்கள் மாநாட்டில் இக்கருத்துக்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும். மேலும் இவ்வல்லுநர்களின் கருத்தறியும் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு தடைவை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர்,
உயர் கல்வித் துறை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.